## பி.சி.ஜி. தடுப்பு மருந்து (பெசில்லே கேல்மேட்-கியூன்)

இது காசநோயிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. நோயை விளைக்காத காச நோய்க் கிருமியின் வடிவம் இது. இது உடலில் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி காசநோய்க்கு எதிராக செயல்பட வைக்கிறது. பி.சி.ஜி. காசநோய்க்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கும். ஆனால் இது கொடுக்கப்படும் அனைவருக்கும் நோயிலிருந்துப் பாதுகாப்பு அளிக்காது.

2005 ஆம் வருடம் பி.சி.ஜி. திட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட பிறகு. யுனைட்டட் கிங்டத்தில் இரண்டாம் நிலை கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தொடர்ந்து பிசிஜி வழங்கப்படுவதில்லை. தற்போது அவர்களுக்கு பதிலாக காசநோய் வருவதற்கு அதிக வாய்ப்பிருக்கும் சிறு குழந்தைகள், சிறுவர் சிறுமியர்கள் மற்றும் இளைஞர்களை மையமாக வைத்து திட்டமிட்டுள்ளனர். அனைவருக்கும் நோயிலிருந்துப் பாதுகாப்பு அளிக்காது.

## பி.சி.ஜி. யை யார் அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும்?

சுகாதாரத் துறையின் பரிந்துரைகள்:

- காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக வசிக்கும் இடங்களில் (அதா. ஒவ்வொரு 100,000 மக்களிலும் ஒரு வருடத்தில் 40க்கும் மேற்பட்டவர்கள் டி.பி. நோயினால் பாதிக்கப்படுகின்ற இடங்களில்) பிறந்த அல்லது வசிக்கும் 12 மாதங்களுக்குள்ளான அனைத்து குழந்தைகள், அதிக எண்ணிக்கையில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழும் இடங்களில் பிறந்த பெற்றோர் அல்லது தாத்தா, பாட்டியை கொண்டிருப்பவர்.

  *உங்கள் குழந்தை இந்த வகையைச் சேர்ந்ததாக இருந்தால் உங்கள் மருத்துவச்சி அல்லது சுகாதார ஆய்வாளர் பி.சி.ஜி.க்கு ஏற்பாடு செய்ய வேண்டும். உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் இவர்களிடம் கேட்டறியுங்கள்.*

- பி.சி.ஜி. எடுத்துக் கொள்ளாத, பிறந்து அதிக மாதங்கள் ஆன குழந்தைகளுக்கு காசநோய் இருக்கிறதா என்று பரிசோதிக்க வேண்டும். தேவைப்பட்டால் தடுப்பு மருந்து கொடுக்கப்படும். அதிக எண்ணிக்கையில் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வசிக்கும் இடங்களில் வசித்திருந்தாலோ அல்லது பெற்றோர் அல்லது தாத்தா, பாட்டி அதிக எண்ணிக்கையில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழும் இடங்களில் வசித்திருந்தாலோ பிறந்திருந்தாலோ காசநோய் வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

  *உங்களுடைய குழந்தைக்கு காசநோய் வரும் வாய்ப்பு அதிகமிருந்தும் அவர்களுக்குத் தடுப்பு மருந்துக் கொடுக்கப்படவில்லை என்றால் உள்ளூர் நோய் எதிர்ப்புத் திறனூட்டல் ஒருங்கிணைப்பாளடமிருந்து ஆலோசனையை பெறுவதற்கு உங்களுடைய சுகாதார அலுவலர், செவிலியர் அல்லது ஜி.பி.யிடம் கூறுங்கள்.*

சில குறிப்பிட்ட நபர்களுக்கு காசநோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கலாம்.

- நுரையீரலில் காசநோய் இருப்பதாகத் தெரியவந்தவர்களுடன் நெருங்கியத் தொடர்பில் இருத்தல்.

  *இந்த வகையைச் சேர்ந்தவர்களாக இருந்தால், நீங்கள் அடையாளம் காணப்பட்டு உள்ளூர் பொது சுகாதார சேவை மையத்திலிருந்து தொடர்பு கொள்ளப்படுவீர்கள். உடல்நல பாதுகாப்பில், முதியோர்களுக்கு, ஆதரவற்றோர்கள் மற்றும் அகதிகளுக்கு தங்கும்*

- விடுதிகளில், ஆய்வு கூடங்களில் வேலை செய்பவர்களுக்கு, சிறைச்சாலை மற்றும் கால்நடை ஊழியர்களுக்கு பணிபுயும் ஆதரவுக் குழுக்கள்.

  *நீங்கள் இவற்றில் ஒருவராக இருந்து உங்களுக்கு 35 வயதிற்குள் இருந்தால், (35 வயதிற்கு மேல் இருப்பவர்களுக்கு பி.சி.ஜி. குறைவான அளவே வேலை செய்வதாக ஆராய்ச்சிகள் கூறுகிறது) உங்களுக்கு முன்பு தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்றால் நீங்கள் பி.சி.ஜி. சம்பந்தமாக சுகாதாரத் துறையை தொடர்பு கொள்ள வேண்டும்.*

- காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக வசிக்கும் நாட்டில் 16 வயதிற்குட்பட்டவர்கள் மூன்று மாதங்களுக்கு மேல் வசிக்கச் செல்லுதல்.

  *நீங்கள் இதில் ஒருவராக இருந்து, முன்பு தடுப்பு மருந்தை எடுத்து கொள்ளவில்லை எனில், உங்களுக்கு பி.சி.ஜி. தேவைப்படும். என்.ஹெச்.எஸ். யிலிருந்து தடுப்பு மருந்தைப் பெற இயலாது. நீங்கள் பயணம் செய்வதற்காக பி.சி.ஜி.யைத் தனியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு கீழேக் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைப் படியுங்கள்.*

## ஆனால் எனக்கு பி.சி.ஜி. வேண்டும், அதனால் நான் அதனைப் பெற முடியுமா?

நீங்கள் மேலே கூறப்பட்டுள்ளவற்றில் எந்த வகையையும் சேராதவராக இருந்தால், பி.சி.ஜி. உங்களுக்குப் பரிந்துரைக்கப்படாது. என்.ஹெச்.எஸ்.லிருந்து இதனைப் பெற இயலாது.

## பயணத்திற்கான பி.சி.ஜி

வழக்கமான பயணம் செல்பவர்களுக்கான தடுப்பு மருந்தாக பி.சி.ஜி. பரிந்துரைக்கப்படாது.

பி.சி.ஜி. எடுத்துக் கொள்ளாத 16 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மூன்று மாதங்களுக்கும் அதிகமாக அதிக எண்ணிக்கையில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வசிக்கும் நாட்டில் தங்க நேர்ந்தால் அவர்களுக்கு பி.சி.ஜி. தேவையா என்று சரும பசோதனை செய்ய வேண்டும்.

வழக்கமாக, பயணம் செய்பவர்களுக்கான பி.சி.ஜி. மற்றும் அதற்கான பசோதனையை தனிப்பட்ட முறையில் செய்து கொள்ள வேண்டும். சில மருத்துவமனைகள் இந்த சேவையை அளிக்கின்றன. ஆனால் விலை வேறுபடும். இதற்கான விலையை முன் கூட்டியே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுத் தெந்து கொள்வது நல்லது. ஙஅநடீஅ டிராவல் கிளினிக்குகள் யூ.கே. முழுவதும் காணப்படுகின்றன ஆனல் அவற்றில் சில பி.சி.ஜி. கொடுப்பதில்லை. www.masta.org என்கிற இணையதளத்தைப் பார்த்து உங்கள் அருகாமையில் இந்த மருத்துவமனைகள் எங்கு உள்ளன என்று தெந்து கொள்ளலாம்.

நீங்கள் லண்டனில் வசிப்பவராக இருந்தால், இரயில் நிலையங்களில் உள்ள மெடிசென்டர் என்று அழைக்கபட்டும் கிளினிக்குகளில் பி.சி.ஜி.யைப் பெறலாம். www.medicentre.co.uk என்கிற அவர்களது இணையதள முகவ மூலமாகவோ 0870 600 0870 என்கிற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கு இந்த மருத்துவமனைகளைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தால் கூடுதல் தகவல்களுக்கு 0845 456 0995 என்கிற எண்ணில் டி.பி. அலர்ட்டைத் தொடர்பு கொள்ளுங்கள்.

## காசநோய் என்றால் என்ன?

காசநோய் என்பது ஒரு பாக்டீயா மூலமாகப் பரவும் நோய். இது பொதுவாக நுரையீரலை பாதிக்கிறது. ஆனால் இவை உடலின் எந்த பகுதியையும் பாதிக்கலாம். ஆறு மாதங்களுக்கான மருந்தினை எடுத்துக் கொண்டாலே காசநோயை குணப்படுத்திவிடலாம். நுரையீரல் அல்லது தொண்டையை பாதிக்கும் காசநோய்தான் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது. சயான மருந்தை எடுத்துக் கொண்டால் இரண்டு வாரங்களிலேயே பல பேருக்கு இதனை குணப்படுத்திவிடலாம்.

## இது எப்படி வருகிறது?

நுரையீரல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருமினாலோ தும்மினாலோ கிருமிகள் காற்றில் பரவுகிறது. அதனை மற்றவர்கள் சுவாசிக்க நேர்கிறது. இதனால் காசநோய் வருகிறது. காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் அதிக நேரம் செலவிடுபவர்களுக்கும் (இவர்கள் அநேகமாக வாழ்க்கைத் துணையாகவோ, குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களாகவோ, சில நேரம் உடன் பணிபுபவர்களாகவோ இருப்பர்) இந்நோய் வர அதிக வாய்ப்புள்ளது. பேருந்து அல்லது இரயில் போன்றவற்றில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் பயணம் செய்வதனால் காசநோய் பரவ வாய்ப்பில்லை.

ஆயினும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் அதிக நேரம் செலவிடுவதால் காச நோய் பரவுகிறது. உமிழ்வதனாலோ, பொருட்களைப் பகிர்ந்து கொள்வதனாலோ காசநோய் பரவுவதில்லை.

யூ.கே.வில் காசநோய் வருவதற்கு அதிக வாய்ப்புள்ள நபர்கள்;

- காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களுடன் அதிக நாட்கள் தொடர்பில் இருப்பவர்கள்
- காசநோய் பரவலாக இருக்கும் இடங்களில் வசிப்பவர்கள்;
- ஹெச்.ஐ.வி. அல்லது மற்ற மருத்துவ நிலைகளில் உள்ளவர்கள்
- ஆதரவற்றோர், குடிப்பழக்கத்திற்கு அடிமையானோர் மற்றும் போதை மருந்து உபயோகிப்போர்களுக்கு உடல் நிலை மிகவும் மோசமடைந்தவர்கள்.

சாதாரண பொது மக்களை விட குழந்தைகளுக்கும் வயோதிகர்களுக்கும் காசநோய் வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

நோய் தொற்றுவதற்கும் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது; மக்களுக்கு நோய் தொற்று ஏற்பட்டிருக்கலாம் ஆனால் அவர்களது உடல் நிலை பாதிக்கப்படாமல் இருக்கலாம் (இது தான் காசநோய் தொற்று மறைந்து இருப்பது), இது பலரின் நோய் எதிர்ப்பு சக்தி பாக்டீயா செயல்படுவதைத் தடுப்பதைப் போன்றது. காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து தான் காசநோய் பரவுகிறது.

## எனது சிறு வயதில் நான் பி.சி.ஜி. தடுப்பு மருந்தை எடுத்துக் கொள்ளவில்லை - யூ.கே.வில் தற்போது காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகத்து வருவதனால் நான் இப்போது எடுத்து கொள்ள வேண்டுமா?

2005ஆம் வருடத்திற்கு முன்பு நமக்கு 13 வயது இருக்கும் போது பள்ளிக்கூடங்களில் பி.சி.ஜி. தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டபோது நம்மில் பலர் பி.சி.ஜி.யைப் பெற்றிருப்போம். நீங்கள் இந்த தடுப்பு மருந்தைப் பெற்றிருக்கவில்லை எனில் (நம்மில் 30% பேர் இதனை பெறவில்லை) இதனை இப்போதுப் பெறுவது நல்லது. 15 வருடங்கள் வரை தான் பி.சி.ஜி. வேலை செய்யும் என்று கருதப்படுகிறது. இரண்டாம் முறை உபயோகிப்பவர்களுக்கும், 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் இது குறைவான பலனை தான் அளிக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. பல பேருக்கு காசநோயால் பாதிக்கப்படுவதற்கு இருக்கும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது. காசநோயைத் தடுப்பதற்கு சிறந்த வழி - காசநோயால் பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்தி நோய் பரவாமல் பாதுகாப்பதே ஆகும்.

Tamil_63796 BCG new.indd 1 10/06/2009 13:06

## பி.சி.ஜி. தடுப்பு மருந்து எவ்வாறு கொடுக்கப்படுகிறது?

காசநோய் பாக்டீயாவை உடலின் எதிர்ப்பு சக்தி எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதைப் பசோதிக்க முதலில் சரும பரிசோதனை செய்யப்படும். வழக்கமாக, 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தாலோ, காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் வாழும் நாட்டில் மூன்று மாதங்களுக்கு மேல் தங்கி இருந்தாலோ ஒழிய அவர்களுக்கு தடுப்பு மருந்து கொடுப்பதற்கு முன்பு எவ்வித பரிசோதனையும் தேவையில்லை. இந்த சரும பரிசோதனையின் பெயர் மாண்டக்ஸ் பரிசோதனை. இந்த சிறிய ஊசி சருமத்தின் மேல் பகுதியில் செலுத்தப்படும். இது சிறிது நேரத்திற்கு வலிக்கும். பொதுவாக நீண்ட நேரத்திற்கு இது வலி ஏற்படுத்தாது. இரண்டு வித இரத்தப் பரிசோதனைகள் உபயோகப்படுத்தப்படும். மற்ற பல பரிசோதனைகள் ஆராய்ச்சியில் பயன்படுத்தப்படும்.

சரும பரிசோதனை செய்த பிறகு, சில நாட்கள் கழித்து சருமம் எப்படி இருக்கிறது என்பதைத் தெந்து கொள்வதற்காக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். எதிர்மறை (நெகட்டிவ்) சரும பரிசோதனையைத் தொடர்ந்து மூன்று மாதங்கள் வரை பி.சி.ஜி. கொடுக்கப்படும். இந்த தடுப்பு மருந்து ஊசி மூலமாக கைகளில் போடப்படும். முதலில், அந்த இடத்தில் சிறிய புள்ளி உண்டாகும், 4-6 மணி நேரத்திற்குள் அது மறைந்துவிடும்.

## பி.சி.ஜி. ஊசியைப் போட்ட பிறகு என்ன நடக்கும்?

சில நாட்கள் வரை ஊசிப் போட்டுக் கொண்ட இடம் இரணமாகி இருக்கும். ஆனால் வழக்கமாக இந்த நிலையில் வேறு எந்த பாதிப்பும் இருக்காது. எவருக்கும் சுகவீனம் அல்லது காய்ச்சலை இது ஏற்படுத்தாது.

கிஇரண்டு வாரங்கள் கழித்து வீக்கம் உண்டாகும். இது சிறிய புள்ளியாகவோ புண்ணாகவோ உருவாகும். இதிலிருந்து நீர் வடியலாம். இதனை அழுத்தாதீர்கள்! இதனை காற்றுப்படும்படி விட்டுவிட்டால் ஆறிவிடும். அதனை சொறிந்து விடாதீர்கள். சிலவேளைகளில், கட்டுக் கட்டிப் பாதுகாப்பது இதற்கு தேவைப்படலாம். வழக்கம் போல குளிக்கலாம், நீச்சல் அடிக்கலாம். ஆனால் புண்ணை கவனமாக ஆற வைக்க வேண்டும். இந்த புண் ஆறுவதற்கு தடுப்பு ஊசிப் போட்டுக் கொண்டதிலிருந்து 8 வாரங்கள் வரை ஆகும்.

கையில் சிறிய வட்ட வடிவ தழும்பு ஏற்படும். காசநோய் எதிர்ப்பு சக்தியை பி.சி.ஜி. ஆறு வாரங்களுக்குள் உடலில் ஏற்படுத்தி விடும்.

பிசிஜி கொடுக்கப்பட்டுவிட்டால், அடுத்த மூன்று மாதங்களுக்கு பிசிஜி போடப்பட்ட கையில் வேறு எந்த தடுப்பூசியும் போடப்படக்கூடாது. மற்ற உயிரோட்டமுள்ள தடுப்பு மருந்துகளைப் போன்றே பிசிஜி -யையும் ஒரே நேரத்தில் கொடுக்கலாம் (உயிரோட்டமுள்ள தடுப்பு மருந்துகள் என்பது பிசிஜி, மீஸ்லெஸ், மம்ப்ஸ், எம்எம்ஆர் மற்றும் ரூபெல்லா ஆகியவற்றை உள்ளடக்கியது). எனினும், இவைகள் ஒரே நேரத்தில் போடப்படவில்லை எனில், உயிரோட்டமுள்ள மருந்துகளுக்கு இடையே 4 வாரங்கள் தாமதம் பரிந்துரைக்கப்படுகிறது.

## சரும பரிசோதனை அல்லது பி.சி.ஜி. எடுத்து கொள்வதற்கு முன்பு உங்களுக்கு கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் இருக்கிறதா என்பதை உங்களது மருத்துவருக்கோ செவிலியருக்கோ தெரியப்படுத்துங்கள்.

- ஹெச்.ஐ.வி. பாசிட்டிவாக இருத்தல்
- கடுமையான நோய்
- முன்போ தற்போதோ இருக்கும் காசநோய் பற்றிய விவரம்
- மண்டல இயக்க ஊக்கிகளை (சிஸ்டமிக் ஸ்டெராய்ட்ஸ்) பயன்படுத்துதல்
- கடந்த காலத்தில் பாஸிடிவ் டி.பி. சரும பசோதனை
- வாரங்களுக்குள் கொடுக்கப்பட்ட மற்ற தொடர்ச்சியான தடுப்பு மருந்துகள்
- முன்பு கொடுக்கப்பட்ட பி.சி.ஜி. தடுப்பு மருந்து
- கர்ப்பமாகவோ தாய்ப்பால் கொடுத்து கொண்டோ இருத்தல
- உடல் சூடு அதிகமாதல் அல்லது காய்ச்சல
- கிளான்டுலர் காய்ச்சல் அல்லது வைரஸ் கிருமிகளால் ஏற்படும் நோய் தொற்று
- பொதுவான நுண்ணியிர் மத்த (செப்டிக்) சருமத்தின் நிலை

எதிர்கால மருத்துவ ஆலோசனைகளுக்காக பி.சி.ஜி. தடுப்பு மருந்துப் பற்றிய குறிப்புகளை வைத்துக் கொள்வது அவசியம்.

**TB Alert** என்பது காசநோய் பற்றி உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் யூ.கே.வில் உள்ள தொண்டு நிறுவனமாகும்.

யூ.கே.விலும் வளர்ந்து வரும் நாடுகளிலும் நோயாளிகள் சரியான தகவல்களும் சிகிச்சையும் பெற வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். உங்கள் ஆதரவுடன் காசநோய் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்கி நிறைய உயிர்களை எங்களால் காப்பாற்ற முடியும்.

**TB Alert,**
Community Base,
113 Queens Road,
Brighton BN1 3XG
Tel: 01273 234030

மேலும் விவரங்களுக்கு அல்லது இந்த பிரசுரத்தின் பிரதிகளைப் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 770 (அலுவலக நேரத்தில் மட்டும்).

டி.பி.அலெர்ட்டிற்கு நன்கொடை வழங்க அல்லது தொண்டு செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 784 (அலுவலக நேரத்தில் மட்டும்).

அல்லது www.tbalert.org என்கிற இணையதளத்தைப் பாருங்கள

## டி.பி.யின் பொதுவான அறிகுறிகள்:

- வழக்கமான மருந்து சாப்பிட்டும் மூன்று வாரங்களுக்குத் தொடர்ந்து இருமல் இருத்தல்
- கடுமையான காய்ச்சல்
- படுக்கையை மாற்ற வேண்டிய அளவுக்கு இரவில் வேர்வை அதிகமாக இருத்தல
- காரணம் இல்லாமல் எடை குறைதல்
- களைப்படைதல் (சக்தி குறைதல் அல்லது அதிக சோர்வு)
- சுரப்பி வீக்கம
- இருமும் போது இரத்தம் வருதல் (இது மிகவும் அதாக நிகழ்வது, அப்படி நிகழ்ந்தால

இந்த அனைத்து அறிகுறிகளும் வேறு பிரச்னைகளுக்கான அடையாளங்களாக இருக்கலாம், ஆனால் இவற்றில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிகுறிகள் இருந்தால் நீங்கள் உள்ளூர் மருத்துவமனையில் உள்ள மருத்துவரையோ செவிலியரையோ சந்திக்க வேண்டும்.

TB ALERT
Stop Tuberculosis Worldwide

# காசநோயும் (டி.பி.) பி.சி.ஜி. தடுப்பு மருந்தும்



NHS